**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.131/2025**

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 24.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜாங்கம் (PW–2) | வயது | : | 71 /2026 |
| க/த பெயர் | : | திரு. தங்கப்பன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | முக்குளம் சாத்தனூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) முக்குளம் சாத்தனூரில் எவ்வளவு ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் பிறந்ததில் இருந்து வசித்து வருகிறேன். தேவதாஸ் எப்போது காணாமல் போனார் என்றால் 2006 இல் காணாமல் போனார். நான் எப்போது அவரை பார்த்தேன் என்றால் 2006 இல் பார்த்தேன். தேவதாசை கண்டுபிடிக்க நடவடிக்கை எடுத்தோமா என்றால் எடுத்தோம், இதுவரை எங்கு உள்ளார் என்று தெரியாது. வாதி எனது உறவினரா என்றால் எனது ஊர்க்காரர். வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.24 18:08:14 +0530

District Munsif

Mannargudi.